IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O. S. No. 107/2017

சாட்சி : PW1

பெயர் : தனம் தேதி: 24-10-2024

**<u>அசல் வழக்கு எண். 36/2021ல் உள்ள வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

அசல் வழக்கு எண். 36/2021ல் உள்ள வாதிகள் எனது மகன்கள் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என் கணவர் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் எனது மகள் மற்றும் மகன் என்று சொன்னால் சரிதான். எனது கணவருக்கு ஓமலூர் தாலுக்கா, கருக்கல்வாடி கிராமத்தில் பூர்வீக சொத்து உள்ளதா என்றால் ஆமாம். அதே கிராமத்தில் எனக்கு சுயமாக பாத்தியப்பட்ட 5-1/2 ஏக்கர் நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி இரண்டு சொத்துக்களை பொறுத்தும், நானும், எனது குடும்பத்தாரும் சேர்ந்து 2008ல் ஒரு செல்லமுத்து என்பவருக்கு பொது அதிகாரப்பத்திரம் எழுதி கொடுத்தோம் என்று சொன்னா'ல் சரிதான். பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்த போது பணம் முழுவதையும் வாங்கி கொண்டோம் என்று சொன்னால் ஆமாம். அந்த பணத்தை கொடுத்து தான் தாவா சொத்து கிரயம் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் ஒரு பகுதியை பொறுத்து 2016ல் என் கணவர், என் மகள் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதியது தெரிந்த பின்பு தான் நான் அசல் வழககு எண். 107/2017 தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். தாவா ொசத்தில் நானும், வாதிகள் மட்டும் தான் சுவாதினத்தில் இருக்கின்றோம்

என்று சொன்னால் நான் மட்டும் தான் சுவாதீனத்தில் உள்ளேன். எனது கணவரும், மகனும் கே.ஆர்.தோப்பிற்கு அருகில் கருக்கல்வாடியில் குடியிருக்கிறார்கள். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும், பூர்வீக சொத்தை விற்று தாவா சொத்து கிரயம் பெற்றதால் என் மகன்கள் இருவருக்கும் தலா 2-1/2 ஏக்கர் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு 1/6 பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. முழு சொத்தும் என்னுடையது தான். தாவா சொத்து முழுவதும் எனக்கு பாத்தியப்பட்டது, அதில் எனது கணவருக்கு, எனது குழந்தைகளுக்கோ உரிமையில்லை.

ஒம்/- L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.